இராணிப்பேட்டை மாவட்டம் , அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம் அரக்கோணம் கிழக்கு அரக்கோணம் மத்தியம்,மேற்கு, நெமிலி கிழக்கு ,மத்தியம், பேரூர்தக்கோலம் பேரூர் ஒன்றிய திமுக சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வருகின்ற சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற அனைவரும் உழைக்க வேண்டும் என்று சிறப்புரையாற்றினார். உடன் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ் வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.கண்ணையன், அ.அசோகன், மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் , சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 30.08.2024 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் பங்கேற்று, விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை முன்னிட்டு, துறை ரீதியாக அமைக்கப்பட்டிருந்த செயல் விளக்க கண்காட்சியினை பார்வையிட்டனர். உடன் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி உட்பட பலர் உள்ளனர்.

திருப்பத்தூர்-தேவகோட்டையில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை!

சிவகங்கை, செப். 5 -

சிவகங்கை மாவட்டத்தில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று வருகின்றது. இதில் நான்காம் கட்டமாக திருப்பத்தூர் ஒருங்கிணைந்த ஒன்றியங்கள், நெற்குப்பை பேரூர் மற்றும் கல்லல் மேற்கு, சாக்கோட்டை மேற்கு, பள்ளத்தூர், கானாடுகாத், தான்,கோட்டையூர் , கண்டனூர் பேரூர் மற்றும் தேவகோட்டை நகரம், தேவகோட்டை ஒருங்கிணைந்த ஒன்றியங்கள், கண்ணன்குடி, சாக்கோட்டை கிழக்கு, புதுவயல் பேரூர் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட அவை தலைவர் அ.கணேசன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் த.சேங்கை. மாறன், திருமதி ஜோன்ஸ்ருசோ ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு பொது உறுப்பினர்கள் கூட்டம் குறித்தும் கட்சி வளர்ச்சி பணிகள் குறித்தும் அமைச்சர் கே ஆர் .பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார்.

இந்த கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சோ. சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், குன்றக்குடி சுப்பிரமணியன், கே . எஸ். ஆனந்த், சுப.சின்னத் துரை, நாகனி ரவி, பூபாலசிங்கம் லெ.மு ரவிச் சந்திரன், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.கார்த்திகேயன், கே.பி.எஸ். பழனியப்பன், அசோக், பகுருதீன் அலிபாய், பிரம்மையா, ராசு, தேவ கோட்டை நகர் கழக செயலாளர் பெரி. பாலா, திருப்பத்தூர் பேரூராட்சிமன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுஅணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், துணை அமைப்பாளர் கோபாலக் கண்ணன், பேரூராட்சி கவுன்சிலர் ராஜேஸ்வரி சேகர், மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என். ரவி, நிர்வாகிகள் ராம ரவி, பொருளாளர் ஏ.எம். கண்ணன், ஷாஜகான், சோமசுந்தரம், புதூர் கண்ணன், ஒன்றிய துணைசெயலாளர் முத்துக்குமார் இளைஞரணி மனோகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே. எஸ் .ரவி,ஆதி. கண்ணாத்தாள் , பேரு ராட்சி மன்ற தலைவர் ராதிகா, ஒன்றிய கவுன்சிலர் மருது பாண்டியன், மணிமுத்து, பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் முருகப்பன், ஜாகிர் உசேன், கவுன்சிலர்கள் சுவாதி, ராமு, சேக் அப்துல்லா, பிச்சையம்மாள், முன்னாள் எம்.எல்.ஏ கருப்பையா, நிர்வாகிகள் வர்த்தக அணி சரவணன், அப்துல் ஜபார், பொருளாளர் அன்புச் செழியன், இளங்கோ, கருணாநிதி, இலக்கிய அணி அழகையா, மகளிரணி நிர்வாகிகள் அமைப்பாளர் தமிழ்செல்வி கருப்பையா. சுதாசிவப்பிரகா சம்,இளைஞரணி ராஜா உட்பட ஊராட்சி கழகநிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் இல்லத் திருமணம்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – பி.மூர்த்தி – சா.சி.சிவசங்கர் – சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலை! முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் பங்கேற்பு!

சிவகங்கை, செப். 5 -

சிவகங்கை மாவட்ட தி.மு.க. மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் - மு.செ.கணேசன் ஆகியோரின் புதல்வி மு.செ.க. எழில் நிலா - பி.ரோகித்ராஜ் ஆகியோரின் திருமணம், செப்டம்பர் 8 - ஞாயிற்றுக்கிழமை அன்று சிவகங்கை மாவட்டம் - ஒக்கூரில் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், கழகதுணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் கலந்துகொண்டு மணவிழாவினை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

இம்மணவிழாவிற்கு அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, பி.மூர்த்தி, சா.சி.சிவசங்கர், சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக முன்னணியினர் பலரும் இம்மணவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்துகிறார்கள்.

இம்மணவிழா பற்றிய விபரம் வருமாறு:-

சிவகங்கை மாவட்ட தி.மு.க. மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் -சின்னசேலம் பேரூராட்சி செயல் அலுவலர் மு.செ. கணேசன் ஆகியோரின் மகள் ஹரிணி என்ற எழில்நிலா - பெரம்பலூர் மாவட்டம் பசும்பலூர் ரா. பிச்சப்பிள்ளை - பி. விஜயா ஆகியோரின் மகன் ரவிசங்கர் என்ற பி.ரோஹித் ராஜ் ஆகியோரது திருமணம் 8.9.2024 - ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணி அளவில் சிவகங்கை மாவட்டம் - ஒக்கூர் - அண்ணா நகரில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் தலைமை வகிக்கிறார்.

சிவகங்கை வடக்கு ஒன்றியச் செயலாளர் திருமலை ஆ.முத்துராமலிங்கம் வரவேற்புரையாற்றுகிறார்.

அமைச்சர்கள் எஸ். ரகுபதி, பி. மூர்த்தி, சா.சி.சிவசங்கர் சிவ.வீ. மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில மகளிரணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி, முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சிவகங்கை நகர் மன்றத் தலைவர் சி.எம். துரை ஆனந்த், சிவகங்கை தெற்கு ஒன்றியச் செயலாளர் ம.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி., திருமதி. பிரேமா பெரியகருப்பன், கே.கே.செல்லப் பாண்டியன், தா.சேங்கை மாறன், இ.எம்.சுதர்சன நாச்சியப்பன், பவானி ராஜேந்திரன், அ.கணேசன், எஸ்.மாங்குடி, எம்.சின்னத்துரை, ஜோன்ஸ் ரூசோ, கே.எஸ்.எம்.மணிமுத்து, எஸ்.குணசேகரன், சுப.துரைராஜ், நாகனி பி.செந்தில்குமார், வி.ராஜசேகரன், சுப.மதியரசன், உடையப்பா சுப்பிரமணியன், கே. மாரியப்பன் கென்னடி, தா. ராமையா, புதுக் கோட்டை விஜயா, கதி.ராஜ்குமார், சல்மா அப்துல் மாலிக், ச. இன்பலாதன், மருத்துவர் ப.மீ.யாழினி, சேலம் சுஜாதா உள்பட பலரும் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

புரவலர் பொ.அன்பழகன் - ஜேம்ஸ் தேவதாசன்- க.மு.மாணிக்கம் பங்கேற்பு!

மும்பை கலைஞர் தமிழ்ச்சங்க நிர்வாகிகள் கூட்டம்!

ம.சேசுராசு – முன்னணியினர் சிறப்புரை!

மும்பை, செப். 5 -

மராத்திய மாநிலம் மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகிகள் கூட்டம் தாராவி அசோக்மில் காம்பவுன்ட் அரங்கத்தில் புரவலர் பொ.அன்பழகன், செயலாளர் ஜேம்ஸ்தேவதாசன்,பொருளாளர் க.மு. மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் கலைஞர் தமிழ்ச் சங்கம் நிறுவனர் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை மும்பையில் சிறப்பாக கொண்டாடுவது என முடிவு எடுக்கப் பட்டது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள் வருமாறு:

தன்னிகரில்லா தலைவர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை மராத்திய மாநிலம் மும்பையில் கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில் வருகிற நவம்பர் திங்களில் மிகவும் சிறப்பாக நடத்திட இன்றைய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இவ்விழாவில் 500 நபர்களுக்கு மேல் இலவச நலதிட்ட உதவிகள் வழங்குவது எனவும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு சிறப்பு சேர்த்திடும் வகையில் நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியிடுவது என்றும்,

கலைஞர் புகழை மென்மேலும் பரப்புகின்ற வகையில் கவியரங்கம்,கருத்தரங்கம் நடத்துவது எனவும்,

மும்பையில் கழக வளர்ச்சியில் மும்முரமாக இருந்து செயலாற்றிய கழக முன்னோடிகளை கவுரவப் படுத்தும் வகையில் அவர்களுக்கு கலைஞர் படம் பொறித்த சுவர் கடிகாரங்கள் வழங்கி வேண்டும் எனவும்,

கலைஞர் படம் பொறித்த 2025 ஆண்டுக்கான தினசரி நாள்காட்டி வெளியிடுவது எனவும்

மும்பையில் அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்படும் தமிழ் ஆர்வலர்களை அழைத்து சிறப்பு செய்வது எனவும் ஏகமனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இலவச நலஉதவிகள் வழங்கி பேருரையாற்ற சிவகங்கை மாவட்ட திமுக செயலாளரும், தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறை அமைச்சருமான அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களையும்,

அன்றைய தினம் நடைபெறவிருக்கின்ற கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கிற்கு தலைமையேற்று நடத்தித்தர முன்னாள் அமைச்சரும் காரைக்குடி கலைஞர் தமிழ்ச் சங்கம் நிறுவனருமான இலக்கியத் தென்றல் முகவை மு.தென்னவன் அவர்களையும் அழைத்து சிறப்பு சேர்க்க வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இன்நிகழ்வில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஜான் சாமுவேல்,நீதிதுரை,காரை இரவீந்திரன்,மாறன் ஆரிய சங்காரன், தனுஸ்கோடி, வே.இரவிச்சந்திரன், இரா. ரவிரஜினி, இரா.காந்தி,அ. அலெக்சாண்டர்,

களந்தை சண்முகவேலு, மற்றும் சி.பாண்டியன், பிராங்கிளின்,எம்.ராஜன், தை.ரூசோ,காளிமுத்து, எஸ்.பி.ஆனந்த், ரவிகுணசீலன்,வெ.அன்பரசு,மு. இராமநாதன்,ஜோயல், தோ.ஸ்டீபன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு சால்வைக்கு பதிலாக கருப்பு சிவப்பு கலர் சட்டை துணி கொடுத்து மரியாதை செய்யப் பட்டது.

நிர்வாகக் குழுவினர்கள் சேர்ந்து புரவலர், தலைவர்,செயலாளர்,பொருளாளர் ஆகியோர்க்கு சால்வை அணிவித்து மரியாதை செய்தார்கள்.

கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து அனைவராலும் பூக்கள் தூவி மரியாதை செய்யப்பட்டது.

பெரம்பலூர் மாவட்ட வர்த்தக அணி

வி.எஸ்.பெரியசாமி மறைவு!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் - வீ.ஜெகதீசன் அஞ்சலி!

பெரம்பலூர், செப். 5-

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் கிராமத்தைச் சேர்ந்த மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர், வி.எஸ்.பெரியசாமி வயது 50. 03.09.24 அன்று காலை மாரடைப்பால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த வி.எஸ். பெரியசாமிக்கு தனலெட்சுமி என்கிற மனைவியும், சக்திராஜ், வடிவழகன் எனும் இரண்டு மகன்களும், கௌரி என்கிற மகளும் உள்ளனர். அவரது உடல் வேப்பூர் கிராமத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவரது உடலுக்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட கழக

பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன்,கு.சின்னப்பா, கா.சொ.க. கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். அவரது உடல் நேற்று (04.09.24 - புதன்கிழமை) 11 மணியளவில் வேப்பூர் கிராமத்தில் தகனம் செய்யப்பட்டது.

அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருப்பத்தூர் மேற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருப்பத்தூர், செப். 5 -

திருப்பத்தூர் மேற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ. வேலு வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் திருப்பத்தூர் மேற்கு ஒன்றியத்தில் அவைத்தலைவர் சி.சின்னதம்பி தலைமையில் கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. இதில் இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக க.தேவராஜி மாவட்ட கழக செயலாளர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில், தமிழ் நாடு முதலமைச்சராக பதவியேற்று இந்திய துணை கண்டத்தில் நெ.1 முதலமைச்சராக செயல்பட்டு அனைத்துத்துறைகளிலும் முன்னோடி திட்டங்களை வழங்கி நல்லாட்சியினை தமிழ்நாட்டு மக்களுக்கு தந்து கொண்டுள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை இக்கூட்டம் வணங்கி வாழ்த்தவும்,

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும் கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதிஸ்டாலின் அவர்களை கழகத்தலைவர் அவர்கள் நல்லாசியுடன் துணை முதல்வராக்க வேண்டும் எனவும்,

செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாள், செப்17, பெரியார்பிறந்தநாள், செப்17 கழகம் தொடங்கப்பட்ட நாள் ஆகியவை ஒருங்கிணைத்து, செப்17ல் தடை பெற உள்ள முப்பெரும் விழாவினை சிறப்பாக கொண்டாடுவதெனவும்,

கழக ஆட்சியின் திட்டங்களின் மக்கள் நலப்பணிகளை மக்களிடம் கொண்டு சேர்க்க இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

எதிர்வரும் தேர்தல்களிலும் கழகம் தொடர வெற்றியை பெற்று ஆட்சி அமைக்கும் வகையில் வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல், சரிபார்த்தல் உள்ளிட்ட தேர்தல் பணிகளை முனைப்புடன் முனைப்புடன் செயல்படுத்த பாடுபடுவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானங்கள் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது.

ஒன்றிய கழக நிர்வாகிகள், சி.கே.சின்னதம்பி, சி. கழகரசு, எ.விஜயா, எம். ராஜேந்திரன், எல்.சிவலிங்கம், எஸ்.சரவணன், வி. செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர். கு. ராஜமாணிக்கம், மாவட்ட துணை செயலாளர்கள். எ.சம்பத்குமார், டி.கே. மோகன், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதி ராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள்.சு.அரசு, டி.ரகுநாத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி. வடிவேல், ஒன்றியக்குழு தலைவர். விஜயா, துணை சேர்மென். டி. ஆர்.ஞானசேகரன், வி.அன்பழகன், எம்.ஜி.ராமச்சந்திரன், எஸ். சி.விஜயகுமார், எஸ். பி.அண்ணாதுரை, எஸ். மேகநாதன், அருள்நிதி, உள்ளாட்சி பிரதிநிதிகள், துணை அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் திரளாக கலந்து கொண்டு இக்கூட்டத்தை சிறப்பித்தனர். இறுதியில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எ.ஆதித்தியா நன்றியரையாற்றினார்.

பாராலிம்பிக் போட்டி:

குண்டு எறிதலில் இந்தியாவிற்கு வெள்ளிப் பதக்கம்!

பாரீஸ், செப். 5 -

பாரீஸ் பாராலிம்பிக் தொடரில் ஆடவர் குண்டு எறிதல் போட்டியில் இந்திய வீரர் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

16.32 மீட்டர் தூரம் குண்டு எறிந்து இந்திய வீரர் சச்சின் சர்ஜோராவ் வெள்ளிப் பதக்கம் வென்றார். குண்டு எறிதலில் வெறும் 6 சென்டி மீட்டரில் தங்கப் பதக்கம் வெல்லும் வாய்ப்பை இந்திய வீரர் சச்சின் தவறவிட்டார்.

சச்சின் கிலாரி 40 ஆண்டுகளில் பாராலிம்பிக் ஷாட்புட்ல் பதக்கம் வென்ற முதல் ஆண் தடகள வீரர் ஆனார்

மராத்திய மாநிலம் மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகிகள் கூட்டம் தாராவி அசோக்மில் காம்பவுன்ட் அரங்கத்தில் புரவலர் பொ. அன்பழகன், செயலாளர் ஜேம்ஸ்தேவதாசன்,பொருளாளர் க.மு.மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் கலைஞர் தமிழ்ச் சங்கம் நிறுவனர் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெற்றது.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் திருப்பத்தூர் மேற்கு ஒன்றியத்தில் அவைத்தலைவர் சி.சின்னதம்பி தலைமையில் கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. இதில் இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.